# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8109174

1. District மாவட்டம்: திருவாரூர் PS: காவல்நிலையம் VSAC Year ஆண்டு 2023 FIR No முதஅ எண் 9 Date நாள் 7.12.20..

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள் 7
(ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 4.12.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 5.12.2023-15.30Pm
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் 06.12.2023-17.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் FIR Time : நேரம் 07.12.2023-09.00hrs
07.12.2023

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக டைப் செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மன்னார்குடி நகராட்சி அலுவலகம் 25 km தென் மேற்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் . District : மாவட்டம் . —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. ஷரிபுதீன் (b) Father's/Husband's Name : தந்தை / கணவர் பெயர் முகமது அப்துல்லா
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 60/2023 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண் 522, பத்ரியார் தெரு பொதக்குடி அஞ்சல் கூத்தாநல்லூர் (TK) திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. தனபால் RI நகராட்சி அலுவலகம் மன்னார்குடி
60/2023

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி. **G.R.**சித்ரா ஆகிய நான் 07.12.2023-ந் தேதி 09.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது 06.12.2023ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் **M.**சர்புதீன் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து கொடுத்த புகார் மனுவின் மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் **M.** சர்புதீன் வயது 60/2023 த/பெ. முகமது அப்துல்லா, **No.528,** பதுரியா தெரு, பொதக்குடி, ஆய்குடி அஞ்சல், கூத்தாநல்லூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் கூத்தாநல்லூர் தாலுக்கா, பொதக்குடியில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் 6ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் துபாயில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். கொரானா பெருந்தொற்றுக்கு பின்னர் கடந்த 2019-ல் துபாய் நாட்டிலிருந்து ஊருக்கு வந்துவிட்டேன். எனது தம்பி அன்வர்தீன், தம்பி மனைவி நசிராகனி மற்றும் குழந்தைகளுடன் துபாயில் வசித்து வருகிறார். எனது தம்பி மனைவி நசிராகனி பெயரில் மன்னார்குடி மஸ்தான் பள்ளி தெருவில் 6 கடைகள் மற்றும் பொதக்குடியில் வீடு உள்ளது. எனது தம்பி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு M. S...

Name: பெயர் G.R. சித்ரா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No எண் ........ 0
VE AC TVR
7/12/2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

(குற்ற எண். 09/2023 FIR-ன் தொடர்ச்சி...,)

கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி கடைகள் மற்றும் வீட்டினை நான்தான் பராமரித்து வருகிறேன். மன்னார்குடி மஸ்தான் பள்ளி தெருவில் கீழ் தளத்தில் மூன்று கடைகளும் மேல் தளத்தில் மூன்று கடைகளும் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மேல் தளத்தில் உள்ள இரண்டு கடைகள் கடந்த 10 வருடங்களாக மூடப்பட்டு வாடகைக்கு விடாமல் இருந்ததால் EB இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. மேற்கண்ட இரண்டு கடைகளையும் வாடகைக்கு விடலாம் என்று தற்போது புதுப்பித்தேன். பின்னர் அந்த கடைகளுக்கு ஏற்கனவே கொடுக்கபட்டிருந்த EB இணைப்பு எண்கள் 114 மற்றும் 115 ஆகியவற்றிற்கான தற்போதைய நிலையினை Online மூலம் பிரின்ட் எடுத்துக்கொண்டு மன்னார்குடி EB அலுவலகத்திற்கு சென்றேன். EB அலுவலகத்தில் EB இணைப்பு துண்டித்து பல வருடங்கள் ஆகிவிட்டதால் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று CC சர்டிபிகேட் வாங்கி வருமாறு சொன்னார்கள். அதனால் 04.12.2023ஆம் தேதி மன்னார்குடி நகராட்சி அலுவலகத்திற்கு சென்று நகராட்சி அலுவலகத்தில் இருந்த RI தனபாலிடம் CC சர்டிபிகேட் (கம்பிளீசன் சர்டிபிகேட்) கேட்டு மனு கொடுத்தேன். மனுவினை வாங்கி RI பார்த்துவிட்டு பழைய பில்டிங்காக உள்ளது இதற்கு அதிகம் செலவாகும் என்று கூறினார். அதற்கு நான் தொடர்ச்சியாக வரி கட்டி வருகிறேன், தற்சமயம் தான் கடைகளை புதுப்பித்துள்ளேன் என்று கூறினேன். அதற்கு RI தனபால் கட்டிடத்திற்கு வரி கட்டியிருந்தாலும் CC சர்டிபிகேட் வழங்குவதற்கு ஒரு கடைக்கு ரூ.5000/- என்றும் இரண்டு கடைகளுக்கு சேர்த்து ரூ.10,000/-ம் எனக்கு வேண்டும் என்று லஞ்சமாக என்னிடம் பணம் கேட்டார். நான், எனது தம்பியிடம் கேட்டு சொல்கிறேன் என்று கூறி வந்துவிட்டேன். பின்னர் 05.12.2023ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் மன்னார்குடி நகராட்சிக்கு சென்று RI தனபாலை சந்தித்து அவர் கேட்ட தொகை ரூ.10,000/-த்தில் ஏதாவது குறைத்து கொள்ள முடியுமா என்று கேட்டேன். அதற்கு RI ஏற்கனவே நான் சொன்னதில் கடைக்கு ரூ 2000/-ம் குறைத்து கொண்டு, ரூ.3,000/- வீதம், ரெண்டு கடைக்கும் சேர்த்து ரூ.6,000/- எனக்கு கொடுங்கள் என்று லஞ்சமாக என்னிடம் பணம் கேட்டார். தொகையை தயார் செய்து கொண்டு வந்து தங்களை பார்க்கிறேன் என்று கூறி வந்துவிட்டேன். நான் சரியான முறையில் வரி செலுத்தி இருந்தும் கடைகளுக்கு CC சர்டிபிகேட் கொடுப்பதற்கு என்னிடம் ரூ.6,000/- லஞ்சமாக கேட்டதனால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். எனக்கு அவர் கேட்ட ரூ.6000/-ம், லஞ்ச பணத்தை கொடுக்க விருப்பம் இல்லாததால் RI தனபால் என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.6,000/-ஐ எடுத்து கொண்டு, மன்னார்குடி நகராட்சி அலுவலர் RI தனபால் மீது சட்டப் படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து எடுத்துக்கொண்டு 06.12.2023ந் தேதி திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். புகாருடன் கடைகளுக்கான மின் இணைப்பு எண்கள். 114 மற்றும் 115-ன் தற்போதைய நிலை குறித்து ஆன்லைனில் எடுக்கப்பட்ட விபரம், கடைகளுக்கு 2023 ஆம் ஆண்டிற்கு வரி செலுத்திய நகல், அன்வர்தீன் மனைவி நசீராகனி பெயரில் பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் எண். 4105/2022 –ன் நகல், நசீராகனியின் ஆதார் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd (xxxxxxxxxxx) M.சர்புதீன் 6.12.2023

அய்யா, மேற்படி புகாரின் பேரில் உத்தரவுபடி எதிரி மீது முன்விசாரணை செய்து இப்புகார்மனு மீது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2023 ச/பி 7 **of Prevention of Corruption Act** 1988 **as amended** 2018-ன் படி 07.12.2023-ந் தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. **Sd** (XXXXXXX) 07.12.2023 **G.R.**சித்ரா **Inspector of Police, V&AC, Thiruvarur.**

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

Inspr of Pol
V&AC TVR
7/12/2023